# சிற்றிலக்கிய வரலாறுகளும் வரையறைகளும்

# Sitralakkiya Varalaarugalum Varaiyaraigalum

*முனைவர் கோ. குணசேகர்*
உதவிப்பேராசிரியர் மற்றும் ஆய்வு நெறியாளர்
தமிழாய்வுத்துறை, அறிஞர் அண்ணா அரசு
கலைக்கல்லூரி, விழுப்புரம்

**Dr. G. Gunasekar**
*Assistant Professor and Research Guide*
*Department of Tamil*
*Arignar Anna Government Arts College*
*Villupuram*

*திரு. சு. சீத்தாராமன்*
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்)
தமிழாய்வுத்துறை
அறிஞர்அண்ணா அரசுகலைக் கல்லூரி
விழுப்புரம்

**Mr. S. Sitharaman**
*Research Scholar (Full Time)*
*Department of Tamil*
*Arignar Anna Government College, Villupuram*

### ஆய்வுச் சுருக்கம்

*பிற்கால சோழ மன்னர்களுடை ஆட்சி வீழ்ச்சியுற்ற தமிழ்நாட்டில் பேரரசு எதுவும் எழுவதுக்கூட வாய்ப்பில்லாமல் போனது சிதறிப்பல சிற்றரசுகள் தோன்றின. மக்கள் தங்கள் வாழ்கையினையும் வளத்தையும் சிறுசிறுவட்டங்களுக்குள் சுருக்கி ஒவ்வொரு சிற்றரசர் அல்லது குறுநில மன்னரை நம்பி வாழும் சூழ்நிலைகள் ஏற்பட்டது.*

***முக்கியச் சொற்கள்:***

*சிற்றிலக்கியம், கம்பராமாயணம், பெரியபுராணம், பேரிலக்கியங்கள், பிரபந்தங்கள், பள்ளு, குறவஞ்சி*

### Abstract

*In Tamil Nadu, where the rule of the later Chola kings fell, there was no chance of an empire emerging. Circumstances arose in which the people reduced their life and resources to small circles and relied on each Chitrarasar or Kurunila mannargal.*

***Keywords:***

*Sitrilakiyam, Kambaramayanam, Periyapuranam, Perilakiyangal, Prabanthangal, Pallu, Kuravanji*

**Citation**

Gunasekar, G., and S. Sitharaman. “Sitralakkiya Varalaarugalum Varaiyaraigalum.” *Journal of Tamil Culture and Literature*, vol. 1, no. 3, 2022, pp. 52–58.

**முன்னுரை**

*சிற்றரசர்கள் ஒருவருக்கொருவர் மோதி முரண்படுவது இயல்பு சில சமயம் அமைதியான நிலை நிலவும். இத்தகைய சூழ்நிலை நிலவும் ஓரிடத்தில் கம்பராமாயணம் பெரியபுராணம் போன்ற போரிலக்கியங்கள் தோன்ற வாய்ப்பு இருக்க முடியாது. பேரரசர்களின் பேராதரவின் பயனாகப் பல போரிலக்கியங்கள் தமிழில் தோன்றிச் சிறப்பாக மதிக்கப்பட்டுள்ளன. சிற்றரச ர்களர் அத்தகைய நூல்களை ஆதரிக்கவும் முடியாது அவற்றை அவையினில் அறங்கேற்றி உலகுக்கு அறிவித்துக் காட்டவும் முடியாது. தமிழ்நாட்டில் சிதறுண்டு அரசர்கள்யார் என்பதே அக்கால மக்களுக்கும் புலவர்களுக்கும் சரியாகத் தெரிந்திருக்க முடியாது இருப்பினும் அவர்கள் ஒவ்வொரு சிறுமன்னரை பின்பற்றியே வாழ்ந்தனர்.*

*குறுநில மன்னரைப் பாராட்டி எழுதும் பாடல்கள் சிறந்த இலக்கிய அமைப்பைக் கொண்டு எழுதியவை என்று கருதுவது தவறாகும். குறுநில மன்னரையோ அல்லது அந்த இடத்துக்கு உரிய தெய்வத்தையோ பாடிச் சிறப்பிப்பதாகவே இருக்கும். ஆயினும் அத்தகைய நூல்களில் இலக்கியச் சிறப்புகள் இருக்கும். அவற்றைப் பிரபந்தகங்கள் அல்லது சிற்றிலக்கியங்கள் என்று கூறலாம்.*

*கி.பி 1535ம் ஆண்டு வாழ்ந்தவர்களாகக் கருதப்படும் சிவத்தெழுந்த பல்லவராயன் மீது பாடப் பெற்ற உலாவில்*

***. . . . .தொண்ணாற்றாறு***
***கோலப் பிரபந்தங்கள் கொண்பிரான்***
***(சிவந்தெழுந்த பல்லவன் உலா நூ.86)***

*என்ற தொடர் இடம் பெறுகிறது*

*இதன் வாயிலாகச் சிற்றிலக்கியங்கள் 96 வகை என்று அறியமுடிகிறது. வீரமாமுனிவர் கி.பி. 1732ல் இயற்றிய சதுரகராதியிலும் பிரபந்தங்கள் 96 வகை என்ற குறிப்பு உள்ளது. அவருடைய தொன்னூல் விளக்கம் அவற்றுக்குத் தனித்தனியாக இலக்கண விளக்கம் தருகிறது பிரபந்த மரபியல் என்ற நூலில்*

***பிள்ளைக்கவி முதல் புராணம் ஈறாத்***
***தொண்ணூற்றாறெனுந் தொகைதாமுற்***
***பகாயல் முன்னுறப்பாடும் பிரபந்த***
***மரபியல துபிரபந்த மரபியலே***
***(பிரபந்த மரபியல், நூற் 114)***

*என்று குறிப்பாக விளக்கம் தரப்பெற்றுள்ளது. இத்தகைய மரபு இன்று காணக் கிடைக்கும் பலவகையான சிற்றிலக்கியங்களுக்குப் பொருந்துவது அன்று முன்னூற்றுக்கும் அதிகமான சிற்றிலக்கிய வகைகள் இருப்பதாக அறிஞர்கள் தங்கள் வகைப்பாட்டு ஆய்வின் வாயிலாக நன்கு புலப்படுத்தி உள்ளனர்.*

**இலக்கியக் காலம்**

*பொதுவாக இலக்கியங்கள் அவை எழுந்த காலத்தையும் இடத்தையும் அடிப்படையாகக் கொண்டு கருத்துக்களை விளக்கும் மக்களின் வாழ்க்கைச் சூழல், சமுதாய நிலை, இயற்கை இயல்பு உணர்ச்சிக் கூறுகள் ஆகியவற்றை விளக்கும் தரமானதாக அமையும். சமுதாயப்*

*பின்னணியைச் சிறப்பாக கொண்டு அமையும். சமுதாயப் பின்னணியைச் சிறப்பாக கொண்டு அமையாத இலக்கியங்கள் உயர்வானதாக மதிக்கப்படாது சிற்றிலக்கியங்கள் மிக அதிகமாகத் தோன்றிய காலகட்டம் மக்களிடம் சமய உணர்வுகள் மிகுந்த காலமாகும். ஆகையினால் அவற்றுள் புராணச் சிந்தனைகள் நிரம்பி இருப்பதைக் காணலாம். இருப்பினும் சமுதாயக் கூறுகள் அவற்றுள் இல்லாமல் இல்லை.*

*காலங்கள் மாற மாற மனிதனின் மன இயல்பும் அவன் வாழும் சமுதாயத்தின் நடப்பும் மாறுவது வழக்கம். இத்தகைய மாற்ற நிலையைச் சிற்றிலக்கியங்களில் உணர முடியும். பொதுவாக ஒரே வகையைச் சேர்ந்த இலக்கியம் அதன் அமைப்பு அடிப்படையில் ஏறத்தாழ ஒன்று போல் அமைவதைக் காணலாம். அதன் காரணம் மனிதனின் கால மாறுதலினால் ஏற்பட்ட வளர்ச்சி நிலையே ஆகும். சமுதாய சிந்தனையின் மாற்றத்துக்கும் ஏற்றத்துக்கும் தக்கவாறு கருத்துக்கள் மாறியும், தேறியும் காணப்படுகிறது. திகூடராசப்பக் கவிராயான் குற்றாலக் குறவஞ்சி காட்டும் சமுதாயமும் மனித சிந்தனைகளும், கருமாதாசான் கிருஷ்ணமா குறவஞ்சியில் இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. அவை இரண்டும் சுமார் ஒன்றரை நூற்றாண்டு இடை வெளியுள்ள இலக்கியங்கள் என்பதை உணர வேண்டும்.*

*முக்கியமான சில சிற்றிலக்கியங்களில் அமைப்புக் கூறுகளைப் பற்றி நன்கு அறிந்த பின்னரே அவற்றின் சிறப்பும் பயனும் நன்கு விளங்கும். அத்தகைய இலக்கியங்கள் எந்தச் சூழலில் எவ்வாறு தோற்றம் பெற்றிருக்கும் என்பதைப் பற்றியும் சிந்திக்க வேண்டும். தேவை இன்றி எந்த வகை இலக்கியமும் சமுதாயத்தில் தோன்றாது. இக்கருத்தை மனதில் கொண்டு முக்கியமான சிற்றிலக்கியங்களின் சமுதாயத் தேவையை அறிய வேண்டும். மிகச் சிறப்பாக கருதத்தக்க இவ்வாய்வல சில வகைச் சிற்றிலக்கியங்களைப் பற்றி எளிதாக ஆய்வு நோக்கில் அறிவது நலம்.*

**பள்ளு**

*சிற்றூர்களிலும் நாட்டு புறங்களிலும் விவசாயம் செய்யும் பாமரமக்கள் மிகுதியாக வாழ்வர். அவர்கள் தங்களுடைய மன அமைதிக்காகவும் இன்பப் பொழுது போக்குக்காகவும் சில கலை நிகழ்ச்சிகள் நடத்துவது இயல்பு. அத்தகைய கலைகளில் தங்கள் வாழ்க்கை இயல்புகள் இடம் டபெறுவது இயல்பு. வயலில் வேலை செய்யும் பாமரமக்களாகிய பள்ளர் அந்தத் தொழிலையே அடிப்படையாகக் கொண்டு இசை நாடகங்கள் நடித்துள்ளனர். அத்தகைய கலை இலக்கியங்களைப் பள்ளு என்று பெயானில் அழைக்கின்றனர். வாழ்வியலை அடிப்படையாகக் கொண்ட கலையாகவே பள்ளு விளங்குகிறது. நிலவுடைமைச் சமுதாயம் எவ்வாறு அமைந்திருந்தது என்பதைப் பள்ளு இலக்கியம் வாயிலாக அறிய முடிகிறது.*

**சிற்றிலக்கியத்தில் குறவஞ்சி**

*குறி சொல்லும் குறிஞ்சி நில மக்களாகிய குறவர்களின் வாழ்க்கையுடன் நெருக்கமான தொடர்புடைய கலை இலக்கியமாகக் கறவஞ்சி விளங்குகிறது. குறக்கலுத்தவரான சங்கன், சிங்கி ஆகியோன் வாழ்க்கை இயல்புகள் விவாகக் கூறப்பட்டுகின்றன. சிங்கன் வேட்டையாடுபவன் அவன் காட்டில் விலங்குகளை எவ்வாறு வேட்டையாடுகின்றான் என்பது விளக்கப்படுகிறது. சிங்கி குறி சொல்வதில் மிகத் திறமையானவள். அவள் செல்வந்தர்களின் வீடுகளுக்குச் சென்று குறி கூறுகிறாள். பெரும் பொருட்களைப் பாசாகப் பெறுகிறாள். நீண்ட*

*நாள் பிவுக்குப் பின் சிங்கனும், சிங்கியும் சந்தித்து மகிழ்ச்சியடைகின்றனர். இவர்களின் எளிய வாழ்வு இனிய முறையில் குறவஞ்சி இலக்கியமாக விளக்கப்படுகிறது.*

**நொண்டி நாடகம்**

*தமிழில் சீதக்காதி அநொண்டி நாடகம் திருச்செந்தூர் நொண்டி நாடகம், தில்லை விடங்கன் நொண்டி நாடகம் போன்ற பல நூல்கள் உள்ளன. இத்தகைய இலக்கிய அமைப்பில் ஒரு நொண்டி தான் ஒரே பாத்திரமாக விளங்குகிறது. இது ஒரு நடிப்புக் கலைக்குய இலக்கியமாகும்.*

*ஆடலும் பாடலும் மிகுந்து இந்தக் கலை இது அங்கதப் படைப்பு போன்று அமைந்து சமுதாயத்தில் காணப்படும் சில தீய செயல்களையும் சிந்தனைகளையும் உமையாகவும் எள்ளலாகவும் கண்டிக்கிறது.*

*தீய வழியில் சென்ற ஒருவன் அதற்குய தண்டனையைப் பெற்றுத்தான் செய்த தவறுகளை உணர்ந்து திருத்தமான வாழ்வில் இறைவனால் புகுவதே இத்தகைய சிற்றிலக்கியம் சித்தாக்கும் கருத்து.*

**சிற்றிலக்கியத்தில் பிள்ளைத்தமிழ்**

*தமிழுக்கே சிறப்பாக உள்ள இலக்கிய அமைப்பாகப் பிள்ளைத் தமிழ் விளங்குகிறது. இதனைப் பிள்ளைக் கவியென வெண்பாப்பாட்டியலும் பிள்ளைப் பாட்டெனப் பன்னிரு பாட்டியலும் கூறுகின்றன. பிள்ளைத் தமிழ்நூல்களில் குழந்தைகளுக்கு உய பத்து பருவ நிலைகள் வாசையாக விளக்கப்படுகின்றன. ஒவ்வொரு பருவத்துக்கும் பாடல்கள் பாடப்படும். ஆகையினால் பத்துப் பருவங்களுக்கும் சேர்த்துப் பிள்ளைத் தமிழில் மொத்தம் 100 பாடல்கள் இடம்பெறும். அத்தகையும் விருத்தப்பாக்களாக அமைந்து இலக்கிய நயம் பெருக்கும். இதனை*

***பிள்ளைப்பாட்டே தெள்ளிதின் கிளஞ்ப்பின்***
***மூன்று முதலா மூவேழ் அளவும்***
***ஆன்ற திங்களின் அறைகுவர் நிலையே. . .***

***(பன்னிரு பாட்டியல், நூ.121)***

*பாடப்படும் குழந்தை ஆணாக இருப்பின் காப்பு, தால், செங்கீரை, சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுசேர், என்ற வாசையில் பருவங்கள் அமையும். பெண் குழந்தைகளுக்குப் பின்னருள்ள மூன்று பருவங்களும் கழங்கு, அம்மானை ஊசல் என மாறி அமையும். பிள்ளை தமிழ் சிற்றிலக்கியங்களில் சொல்லழகு, கற்பனைவளம் ஆகியவற்றில் செல்வாக்கு நிலை உடையது.*

*இதனை*

***அண்டத் திறைவின் பொன் முடிக்கும்***
***அமலக் கமலன் மணிமுடிக்கும்***
***அமரர் முனிவர் தலைகளுக்கும்***
***அணியப் பணியக் கிடையாத***
***தண்டைப் பதத்ரா எணக்களித்த***
***தலைவா தாலே தாலேலோ***

***தாமக்கவளைத் திருமலைவித்***
***தககேதாலே தாலேலோ...***
***(திருமலை முருகன் பிள்ளைத் தமிழ்பா.188)***

*இவ்வாறாக இதில் உள்ள சொற்கட்டு கற்பனைத் தன்மை ஆகிய சிறப்புக்களை கண்டு உணரலாம்.*

**சிற்றிலக்கியத்தில் கலம்பகம்**

*கலம்பகம் தெய்வங்களையும் சிறந்தவர்களையும் புகழ்ந்து பாடுவன அகம், புறம் ஆகிய இருவகைப் பொருள் துறைகளும் கலந்து வரும். இத்தகைய இலக்கியங்கள் பலவகையான உறுப்புக்களைப் பெற்றுப் பலவகையான பாவினங்களால் பாடப்படும். கலம்பக உறுப்புகளுள் புய வகுப்பு, திருவடி வகுப்பு வண்டு, அம்மானை, பாண், கைக்கிளை, ஊசல், ஊர், மறம், காலம், தழை, இரங்கல், களி, கார், தூது, குறம் முதலியவை மிகவும் முக்கியமானவை. மேலும் பல உறுப்புகளையும் இணைத்துப் பாடியுள்ளதையும் காணலாம்.*

*கலம்பகத்துக்கும் கோவை இலக்கியத்துக்கும் சில கூறுகளில் தொடர்பு உண்டு. ஆயினும் கோவையானது கதைத் தொடர்புடன் ஒரு வரையறைக்கு உட்பட்டு அமைவது போன்று கலம்பகத்துக்குக் கதைத் தொடர்போ உறுப்புகள் வரையறையோ கிடையாது. பல்லவ மன்னனான மூன்றாம் நந்திவர்மனைப் பாராட்டி கி.பி 9ம் நூற்றாண்டில் தோன்றிய நந்திக் கலம்பகமே முதன் முதலில் எழுதப் பெற்றக் கலம்பக நூல் என்று கருதப்படுகிறது.*

*பிற்காலத்தில் பல கலம்பக நூற்கள் பாடப்பட்டுள்ளன கச்சிஞானப் பிரகாசர், எல்லப்ப நாவலர், குமர குருபரர், சிவப்பிரகாசர் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார், வீரமா முனிவர், மீனாட்சி சுந்தரம் பிள்ளை போன்றோர் பாடிய கலம்பங்கள் மிகச் சிறப்பாகக் கருதத்தக்கவை.*

*கலம்பகம் பலவிதமான பாக்களால் இயற்றப்பட்டுள்ளது. அதில் இலக்கிய நயம், மொழி நயம், கற்பனை நயம் ஆகியவை சிறந்த செறிந்து காணப்படும்.*

*இதனை*

***சூடிமலர் வீழ்நீர்க் கயிலே***
***துள்ளும் காவலூர்க் கயலே***
***நேடி உறைசீர்க் கலிப்புணா***
***நேர உறைநீர்க் கலிப்புணா***
***ஆடி அவிர் மீன் பூண்டானை***
***நாடி நாண்கின் முகந்திருப்பீர்***
***நையா நாளும் முகந்திருப்பீர்***
***(திருக்காவலூர் கலம்பகம் /76)***

*இதிலுள்ள பலவகைச் சிறப்புளன அறியலாம். புலவர்கள் தங்கள் ஆற்றல்களைக் காட்டுவதற்கு கஏற்ற ஓர் இலக்கியக் கருவியாக கலம்பகத்தைக் சிற்றிலக்கியத்தில் கருதியுள்ளனர். பாவலர்களின் உணர்வுகளைப் பல வழிகளில் காட்டுவதற்கு ஏற்ற அமைப்பில்*

*கலம்பகம் விளங்கியுள்ளது. இறைச் சிந்தனைக்கு இடம் உண்டு. அகவுணர்வுகளைக் காட்ட வழி உள்ளது. சமுதாய சிந்தனைகளையும் காட்ட முடியும். கலம்பக இலக்கியத்தில் சமூக உணர்வுடன் அதிகப்படியான இருப்பதாகக் கூற இயலாது.*

*புலவர்கள் எடுத்துக் கொண்ட பொருளைத் தங்கள் இலக்கியத் திறமைகள் விளங்க மிகச் சுவையாகக்க் கூறியுள்ளதைக் கலம்பகத்தில் காணலாம்.*

**சிற்றிலக்கியத்தில் உலா**

*சிற்றிலக்கியங்களில் மிக முக்கியமான ஒன்றாக உலா விளங்குகிறது. ஒரு தலைவன் உலா வருகிறான். மக்கள் இருபுறமும் நின்று அவனைக் காண்கின்றனர். இதில் 7 பருவப் பெண்களின் உள்ளப்பாங்கு, காதல் உணர்வு நிலை ஆகிய அகப்பொருள் கருத்துக்கள் மிகச் சிறப்பாக விளக்கப்படும். பருவமாறமாறப் பெண்களின் உணர்வுகளில் மாற்றங்கள் ஏற்படுவது நன்கு விளக்கப்படுவது உலா இலக்கியங்களில் தனிச் சிறப்பாகும். உளவியல் அடிப்படையில் பல பருவப் பெண்களின் மன இயல்புகள் விளக்கப்பட்டிருப்பது உலா இலக்கியங்களின் உயர்வுக்குக் காரணமாக உள்ளது. சமூக உணர்வுகள் கலந்து காணப்படுகின்றன. இலக்கிய நயமுடன் உலாவில் கருத்துக்கள் கூறப் பெற்றுள்ளன.*

**நிறைவுரை**

*இரண்டு மூன்று நூற்றாண்டு கால அளவுக்குத் தமிழில் சிற்றிலக்கியங்கள் பலவகையாக மலர்ந்து மொழியை வளப்படுத்தி மக்களைக் கவர்ந்துள்ளன. கற்பனைக்கும் பல இடங்கள் அவற்றுள் ஒதுக்கப்பட்டிருப்பினும் உண்மைக்கும் உணர்வுக்கும் சிற்றிலக்கியத்தில் நல்ல இடம் உள்ளது. அவற்றின் சிறப்பை யாராலும் எளிதாக ஒதுக்கி விட முடியாது.*

**துணை நின்ற நூல்கள்**


1. *தா. ஈஸ்வர பிள்ளை தமிழில் சிற்றிலக்கிய வரலாறு, முதற்பகுதி தஞ்சாவூர், தமிழப் பல்கலைக்கழகம் 2005*
2. *உமாதேவி. ந சிற்றிலக்கியக் கட்டுரைகள், தொகுதி-1, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் 2014*
3. *கண்ணன். இரா சிற்றிலக்கிய ஆராய்ச்சி, முதல் தொகுதி, அப்பர் பதிப்பகம் சென்னை -2002*
4. *சண்முகம் பிள்ளை. மு சிற்றிலக்கிய வகைகள் தொகுதி-1, சிதம்பரம்*
5. *ந.வீ. ஜெயராமன் சிற்றிலக்கியச் செல்வம், மணிவாசகர் நூலகம், சிதம்பரம் - 2011*
6. *ந.வீ. ஜெயராமன் சிற்றிலக்கியத் திறனாய்வு, மணிவாசகர் நூலகம், சிதம்பரம் - 2011*
7. *நாஞ்சில் நாடன் சிற்றிலக்கியங்கள், தமிழினி சென்னை, 2013*
8. *மு.பொன்னுசாமி தமிழ் சிற்றிலக்கிய வரலாறு, பாநிலையம் சென்னை, 2016*
9. *இலக்கியத்தின் நோக்கமும், பயனும், தொகுதி - 2, சென்னை உலகத் தமிழாராய்ச்சி, நிறுவனம் 1995*

**References**


1. *Eswara Pillai, T., Tamilil Sitrilakiya Varalaru, Volume I, Tanjore Tamil University, 2005.*
2. *Umadevi, N., Sitrilakiya Katturaigal, Volume I, Meiyappan Pathipagam, Chithambaram, 2014.*
3. *Kannan, R., Sitrilikiya Aaraichi, Volume I, Appar Pathipagam, Chennai, 2002.*
4. *Shanmugam Pillai, M., Sitrilikiya Vagaigal, Volume I, Chithambaram.*
5. *Jeyaraman, N.V., Sitrilikiya Selvam, Manivasagar Noolagam, Chithambaram, 2011.*
6. *Jeyaraman, N.V., Sitrilikiya Thiranaivu, Manivasagar Noolagam, Chithambaram, 2011.*
7. *Nanjil Nadan Sitrilikiyangal, Tamizhini, Chennai, 2013.*
8. *Ponnusamy, M., Tamil Sitrilikiya Varalaru, Pari Nilayam, Chennai, 2016.*
9. *Ilakiyathin Nokkamum Payanum, Volume 2, International Institute of Tamil Studies, Chennai, 1995.*